Registered as a Newspaper

21 JAN 1997
...கராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 08 செவ்வாய்க்கிழமை (21-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 55

# வை-12 ரக கண்காணிப்பு விமானம்

# பலாலியில் புறப்பட்ட பின் மறைவு!

## நேற்றுக் காலை தொடக்கம் தேடுதல் முயற்சி தொடர்கிறது

கொழும்பு, ஜனவரி 21

**நேற்றுக் காலை நான்கு படையினருடன் வேவு நடவடிக்கைக்காக பலாலி விமானத் தளத்திலிருந்து புறப்பட்ட "வை- 12" சீன தயாரிப்பு கண்காணிப்பு விமானம் ஒன்று மர்மமான முறையில் காணாமற் போய்விட்டது. அதனைக் கண்டுபிடிப்பதற்கு விமானப் படையினரும் கடற்படையினரும் நேற்று முழுவதும் மேற்கொண்ட தேடுதல் முயற்சி வெற்றி அளிக்கவில்லை.**

இந்த விமானம் காலை 5.15 மணிக்கு பலாலியிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

இரண்டு விமானிகள், ஒரு கடற்படை அதிகாரி உட்பட நால்வர் விமானத்தில் இருந்தனர்.

விமானம் புறப்பட்டு சுமார் 10 நிமிடத்தில் பலாலியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்தது.

தொடர்பை இழந்த சமயம் அது பலாலிக்குக் கிழக்கே கடலில் 75 மைல் தூரத்தில் காணப்பட்டது.

தொழில் நுட்பக் காரணங்களால் இந்த விமானம் விழுந்து நொருங்கி இருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் விமானத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சி கை கூடாததால் விமானப் படை அதிகாரிகள் எதனையும் உறுதியாகத் தெரிவிக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-4-5-10)

## முச்சந்தி முரளி



அப்ப தேர்தல் நெருங்க, நெருங்க பலருக்கு அதிர்ச்சி வைத்தியம் காத்திருக்கு எண்டு செல்லுங்கோ.... !

## மேயர் பதவி: கணேசலிங்கம் 'அவுட்'

கொழும்பு, ஜன. 21

கொழும்பு மாநகரசபையின் மேயர் பதவிக்கு ஐ.தே.கவின் சார்பில் தற்போதைய மேயர் கே. கணேசலிங்கம் நிறுத்தப்பட மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாநகர சபை மேயர் பதவிக்கு ஐ. தே. க. வின் தவிசாளர் கரு ஜெயசூரியா அல்லது சரித்த ரத்வத்த நிறுத்தப்படலாம் என்று ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் மேயர் பதவிக்கு பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க அல்லது கொழும்பு மாவட்ட எம். பியான பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரா நிறுத்தப்படலாம் என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 2 சடலங்கள் பொலீஸாரால் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று சாவகச்சேரிப் பொலீஸாரால் யாழ். ஆஸ்ப்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இரு இனந்தெரியாத இளைஞர்களின் சடலங்களும் அடையாளம் காணப்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சந்தேகத்துக்குரிய கப்பலை நோக்கி சென்ற சமயமே தொடர்பு இழந்தது

கொழும்பு, ஜனவரி 21

காணாமற்போன வை - 12 விமானம் கடைசியாகக் காலை 5. 25 மணியளவில் வானொலித் தொடர்பு வைத்திருந்தது என்றும் —

யாழ். குடாநாட்டின் வட கிழக்குப் பகுதிக் கடலில் சந்தேகத்துக்குரிய கப்பல் ஒன்றைக் கண்டுள்ளதாகவும் —

அக்கப்பலை நோக்கிச் செல்வதாகவும் — அப்பொழுது பலாலிக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு விமானியால் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

எனினும் வை - 12 விமானத்தின் விமானியால் தெரிவிக்கப்பட்ட அந்தக் கப்பல்; சென்னைக்கும் கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வர்த்தகக் கப்பல் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கப்பல் பாதுகாப்புடன் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**இராணுவ ஆய்வாளர் கருத்து**

இந்த விமானம் காணாமற் போனது குறித்து பி.பி.ஸி.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த வியாழன் காணாமற்போன

## தன்னியக்க உளவு விமானத்தை தேடும் முயற்சி கைவிடப்பட்டது

கொழும்பு, ஜன. 21

கடந்த வியாழக்கிழமை காணாமல்போன விமானி இல்லாத தன்னியக்க உளவு விமானத்தைத் தேடும் நடவடிக்கைகளை கடற்படையினர் கைவிடப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

பூநகரிக்கு அப்பால் கடலில் இந்த விமானம் விழுந்துள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பகுதியில் மோதல்

நேற்றுக் காலை 11.30 மணியளவில் கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

எனினும் மேலதிக விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

இதற்கு முதல் நாளான ஞாயிறன்று கொக்குவில் சந்தியில் இருந்து மருதனார் மடம் சந்தி வரையுள்ள கே. கே. எஸ். வீதிக்குக் கிழக்கே உள்ள பகுதிகள் படையினரால் திடீர் சுற்றிவளைப்புக்கு உள்ளாகின.

அதிகாலை வேளையிலேயே இப்பகுதி முற்றாகச் சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனையிடப்பட்டது.

வீடுகளில் இருந்தோர் பகுதி பகுதியாகப் பொது இடத்துக்கு அழைத்துவரப்பட்டு முகமூடிகளின் முன் நிறுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று தெரியவருகிறது. (இ-3-4)

## கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலை பார்வையிட அமைச்சு அனுமதி

### நாளை விசேட குழு செல்கிறது

யாழ்ப்பாணம், ஜன. 21

பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானப் பகுதியைப் பார்வையிடபாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியதையடுத்து விசேட குழு ஒன்று நாளை கீரிமலைக்குச் செல்லவிருக்கின்றது.

ஆலயத்துக்குச் சென்று பார்வையிட அனுமதிவழங்குமாறு மேற்படி தேவஸ்தான ஆதீனகர்த்தா நகுலேஸ்வரக் குருக்கள் ஏற்கனவே பாதுபாப்பு அமைச்சிடம் விண்ணப்பித்திருந்தார்.

அங்கு செல்ல முன்னர் அனுமதி மறுக்கப்பட்டது.

தற்போது அனுமதி கிடைத்துள்ளதையடுத்து ஆதீன கர்த்தா நகுலேஸ்வரக் குருக்கள், செயலக அதிகாரிகள் சகிதம் நாளை அங்கு செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கிரனேட் வீச்சில் 3 பொதுமக்கள் காயம் எனத் தெரிவிப்பு

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் வீதித் தடைகளை ஏற்படுத்திய படையினர் மீது கிரனேட் வீசப் பட்டதாகவும் —

இச் சம்பவத்தில் மூன்று பொதுமக்கள் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-4)

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகின

### யாழ். மாவட்டத்துக்கு இன்று வரும்

கடந்த செப்டெம்பர் மாதம் நடந்த 5 ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்றுக் கொழும்பில் வெளியாகின.

பரீட்சை முடிவுகள் வெளியாகிய பின் கிடைத்த தகவல்களின்படி இந்தப் பரீட்சையின் வெட்டுப்புள்ளி 99 என்றும் —

யாழ். மாவட்டத்தில் தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவன் அன்றூ 171 புள்ளிகளைப் பெற்று முதல்தர மாணவனாகச் சித்தி அடைந்துள்ளார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இப்பரீட்சையின் யாழ். மாவட்ட முடிவுகளை இன்று விமான மூலம் எடுத்துவர நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (இ-150-5-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவை மேற்பார்வையில் அகதிகளுக்குப் பாதுகாப்புத் தேவை

## ரணில் விக்கிரமசிங்கா யோசனை

கொழும்பு, ஜன. 21

'செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் ஒரு பிரதேசத்தை இனங் கண்டு, அங்கு அகதிகளைத் தங்கவைத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அவசர தேவையாகும்.'

ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா மேற் கண்டவாறு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க குழுவின் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அகதிகள் நிலை மோசமாகி வருகிறது. அவர்களின் நிலையைத் தீர்க்க சகலரும் இணைந்து செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வெளிநாடுகள் உதவ முன்வந்துள்ளன. அரசு இது குறித்து தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளியிட வேண்டும் — என்றும் ரணில் விக்கிரமசிங்கா மேலும் கூறினார்.

(அ-3-150)


# மகாஜனக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிய

**அமரர் தெ. து. தர்மராசா,**
**அமரர் க. கிருஷ்ணபிள்ளை**

ஆகியோரின் நினைவாக

## அஞ்சலிக் கூட்டம்

மேற்படி கூட்டம் பாடசாலை மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை (24-1-97) பி.ப. 1.30 மணிக்கு அதிபர் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/3963)



## U. S. A. லொத்தர்ப் படிவம்

அமெரிக்கா செல்வதற்கான அதிர்ஷ்டத் தெரிவுக்கான விண்ணப்பப் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி ஒன்றின் விலை ரூபா 250/-

**மக்மிலன் புத்தகசாலை,**
இல. 3 பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

(44800)


# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## க. வே. சரவணபவானந்தம் J. P.

குரும்பைகட்டி, புலோலி
(கொழும்பு மாநகர முதல்வரின் பிரத்தியேகச் செயலாளர்)

தோற்றம்: **12 — 09 — 1942**
மறைவு; **24 — 10 — 1996**

அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்ற ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், எமது துயரத்தில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இன்று (21 - 01 - 97) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மகள்,
உறவினர்கள்.

குரும்பைகட்டி,
புலோலி.

(சி/3960)

## சமய சந்நிதிகளில்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் பூரணை தோறும் நடைபெறும் விரிவுரைத் தொடரில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவராச சர்மா ''அறிவியல் நோக்கில் ஆன்மிகம்'' என்னும் பொருளில் உரையாற்றுவார்.

★ ★ ★

உரும்பிராய் ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயிலின் வருடாந்த தேர்த் திருவிழா நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறும். ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (அ-30)

★ ★ ★

ஏழாலை தெற்கு ஸ்ரீவசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும். தீர்த்தோற்சவம் பூரணை தினமான வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும்.

ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமானது.

(அ-30)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை வடகிழக்கு கொண்டலடி ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(அ-30)

## நவாலி வடக்கில் தபால் பெட்டி இல்லை

வலி, தென்.மேற்கு, ஜன. 21

நவாலி வடக்கு பகுதியில் தபால் பெட்டி எதுவுமே கிடையாது.

இதனால் — தமது தபால்களைப் பெட்டியில் சேர்ப்பதற்கு அப்பகுதி மக்கள் அலைகின்றார்கள்.

இது குறித்து — தபாலக நிர்வாகத்திடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-145)

## விமானம் மூலம் கோழிக்குஞ்சு

வலி, தென் மேற்கு, ஜன. 21

விமானம் மூலம் மேலும் 5 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை எடுத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனேகமாக இன்று அவை எடுத்து வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி 5 ஆயிரம் இறைச்சி இனக் கோழிக்குஞ்சுகளும் எடுத்து வரப்படவுள்ளன.

கடந்த ஆண்டில் மட்டும் தென் பகுதியிலிருந்து 60 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் யாழ். குடாநாட்டுக்கு விமானம் மூலம் எடுத்துவரப்பட்டதாக இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-145)


# S. V. முருகேசு

**DISTRIBUTORS FOR:**
Uniliver Ceylon Ltd., Eveready Battery Lanka Ltd., Nestle Lanka Ltd., New Zealand Milk Products, Lanka Milk Foods (CWE) Ltd.

இல. 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு!

எங்களிடம்

GLAXO
PFIZER ] மருந்து வகைகளும்

மற்றும் பால்மா வகைகளும்
ரயர், ரியூப் வகைகளும்
பலசரக்கு வகைகளும்
குளிர்பான வகைகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு;- ரூபா 25,000/- க்கு மேல் மருந்து கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். (44798)



# 1008 நாம யாகம்

இடம்: **அவதாரக் கண்ணன் ஸ்ரீரமணன் ஆலயம்**, சிறப்பாவளை, கொற்றாவத்தை.

நாட்டு மக்களின் நலனுக்காக இன்று **21 - 01 - 97** செவ்வாயன்று மேற்படி யாகம் நடைபெறுகிறது.

அடியார்கள் இதில் கலந்துகொண்டு அவதாரக் கண்ணனின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

யாக நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் அன்று முழுவதும் நடைபெறும்.

-அன்பான அடியார்கள்

(44802)


# மரண அறிவித்தல்கள்

## கனகசபை பொன்னு

(இளைப்பாறிய ஊழியர், காங்கேசன் சி. கூ.)

இளவாலையைப் பிறப்பிடமாகவும், போயிட்டி, கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பொன்னு 19 – 01 – 97 ஞாயிறன்று இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை — சின்னாச்சி தம்பதிகளின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்புக் கணவரும், சரஸ்வதி, திலகவதி, புனிதவதி, காலஞ்சென்ற பகவதி மற்றும் சிவசுப்பிரமணியம் (காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சுந்தரம் (இளைப்பாறிய ஊழியர், இ. போ. ச.), நடராசா (இலங்கை வங்கி, மானிப்பாய்), பாலசுப்பிரமணியம், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவமலர் (இந்தியா), அருந்தவராஜா (நோர்வே), வசந்தமலர் (நோர்வே), ரஞ்சிதமலர் (இந்தியா), தவராஜா (நோர்வே), சறோசா, தேவிகா, விஜயகுமார் (சவுதி), வசந்தகுமார் (நோர்வே), சித்திரா, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), ஜெயவதனி, கலாவதனி, யாழினி, ராசன், நிசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 20-01-97 அன்று உபதபாலக வளவு, கட்டுடையில் நடைபெற்றுத் தகனக் கிரியைகள் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சிவசுப்பிரமணியம்
(மகன்)

உபதபாலக வளவு,
கட்டுடை,
மானிப்பாய்.

(44791)

## சி. கந்தையா (கார் சாரதி)

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சி. கந்தையா (கார் சாரதி) காலமாகிவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், நாகராசா (டோஹா), நகுலேஸ்வரி ஆகியோரின் தந்தையும், சுப்பிரமணியத்தின் மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று 21 - 01 - 1997 செவ்வாய்க்கிழமையன்று நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. செல்லப்பா

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(44801)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம், ஆயுதக் கையளிப்பு இன்றி இரு தரப்புக்கும் இடையில் சமரச சூழ்நிலை

## அரசியல்வாதிகளைச் சிந்திக்க வைக்கும் குமார் ரூபசிங்கவின் யோசனை

கடந்த வாரங்களில் லண்டனை மையமாகக் கொண்ட 'இன்டர் நஷனல் அலேர்ட்' ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமான கலாநிதி குமார் ரூபசிங்க கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

கலாநிதி குமார் ரூபசிங்க, புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விதத்தில் ஒரு மத்தியஸ்தராகவே வந்துள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் அப்படி எதுவுமே இடம்பெறவில்லை. இருந்தபோதிலும் கலாநிதி குமார் ரூபசிங்க, இலங்கையில் தாம் தங்கியிருந்த நாள்களில் கூறிவிட்டுச் சென்ற கருத்துக்கள் நன்கு கவனத்திலெடுக்கப்பட வேண்டியவையாகவே இருந்தன.

'இன்டர்நஷனல் அலேர்ட்' ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் என்ற வகையில் உலகின் பல்வேறு முக்கிய சர்ச்சைகள் குறித்தும் உன்னிப்பாக நோட்டமிடும் வாய்ப்புகள் அவருக்குக் கிடைத்திருந்தன.

சர்வதேச அரசியல் சர்ச்சைகளின் தன்மைகள், அவற்றைத் தீர்த்து வைப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறைகள் என்பவை பற்றியும் தமது இலங்கை விஜயத்தின் போது வழங்கிய பேட்டிகள், கருத்துக் கண்ணோட்டங்களில் கலாநிதி குமார்ரூபசிங்க குறிப்பிட்டிருந்தார்.

சிலமாதங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து வடஅயர்லாந்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை அனுப்பிவைத்து அங்கேயுள்ள நிலைமைகளை பிரிட்டிஷ் அரசு கையாளும் விதம்பற்றி அறியச்செய்வதில் கலாநிதி குமார் ரூபசிங்க தமது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

சந்திரிகா அரசுக்கும் புலிகள் அமைப்புக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற வேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது. இந்த அவசியத்தை ஜனாதிபதி சந்திரிகா கூட முன்பு பெரிதும் உணர்ந்தவராக இருந்தார். ஆனால் தற்போது புலிகள் அமைப்பும் சந்திரிகா அரசாங்கமும், பேச்சுக்கள் என்ற விடயத்தை 'வேப்பங்காயாகவே' கருதிவருகின்றன.

இவ்விருசாராருக்குமிடையே எட்டப்படுகின்ற உடன்பாட்டின் அடிப்படையிலேயே சமரசத்தீர்வொன்றை எட்ட முடியுமென்பது உறுதியாகியுள்ளது!

ஆனால் நிபந்தனைகள், கௌரவப் பிரச்சினைகள் என்று இருதரப்புமே சமரசத்துக்கான சூழ்நிலையொன்றைச் சரிவரக் கட்டியெழுப்ப முடியாதவையாகவே உள்ளன.

இத்தகைய தருணத்திலேயே, டாக்டர் குமார் ரூபசிங்க கூறியவை அரசியல் அவதானிகளின் கவனத்தைப் பெற்றவையாகவுள்ளன.

### உள சுத்தியோடு தீர்க்க எவரும் முன்வரவில்லை

இலங்கையின் இன்றைய வடக்கு - கிழக்குப் பிரச்சினையை எடுத்து நோக்கும்போது, அதனை உளசுத்தியோடு நிதானமான முறையில் தீர்த்துவைப்பதற்கு எவருமே முன்வராத நிலையே காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் அரசியல் பிரச்சினையாகவே இருந்த வடக்கு - கிழக்குத் தமிழர் பிரச்சினையைக்கூட நேர்மையாகத் தீர்த்து வைப்பதற்கு அன்றைய அரசியல் வாதிகள் தவறியிருந்தனர்.

தற்போது ஆயுதமுனைப்போடு கூடிய ஓர் அரசியல் பிரச்சினையாகவே இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரச்சினை இருக்கின்றது.

இத்தகைய தன்மை கடந்த 13 வருடங்களுக்கும் மேலாக எண்ணிலடங்காத அழிவுகளைத் தந்திருக்கின்றது.

இருந்த போதிலும் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை இறுதியும், முடிவுமாகத் தீர்த்து வைத்து ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதில் ஆட்சியாளர்கள் அருகதையற்றவர்களாக இருக்கின்றனர்.

டாக்டர் குமார் ரூபசிங்க இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரச்சினைத்தீர்வு முயற்சிகள் குறித்து நடைமுறைச் சாத்தியமான கருத்துக்கள் பலவற்றைத் தெரிவித்திருந்தார்.

அவர் இவற்றை வெறுமனே [illegible] நீண்டகால உள்நாட்டு யுத்தங்களைக் கொண்டிருந்த நாடுகள் பலவற்றில் கையாளப்பட்ட அணுகுமுறைகளை உதாரணம் காட்டியே தமது கருத்துக்களை டாக்டர் குமார் ரூபசிங்க கூறியிருந்தார்.

★ ''பேச்சுவார்த்தைக்கான சூழல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு போர் நிறுத்தத்தை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை.''

**"மோதல்களுக்கு மத்தியிலும் சமரசத்தை முன்வைக்குமாறு குமார் ரூபசிங்க யோசனை" என்ற தலைப்பில் கொழும்பில் இருந்து வெளியாகும் "தினமுரசு" வார இதழில் "இராஜநந்திரி" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.**

★ மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போதே சமரசப் பேச்சுக்களுக்கான தொடர்புகளை மேற்கொள்ளலாம். அத்துடன் பேச்சுக்களையும் நடத்தலாம்.

★ ''எடுத்த எடுப்பிலேயே தேசங்களையோ அல்லது, பிரபலமான இராஜதந்திர மத்தியஸ்தங்களையோ சமரசத்தீர்வு முயற்சிகளில் எதிர்பார்க்கலாகாது. சிறியளவில் படிப்படியாக தனிநபர் மத்தியஸ்தம் மூலம் தொடர்புகளை ஆரம்பித்து பின்னர் விரிவான முறையில் தீர்வு முயற்சிகளை மேற்கொள்வது.''

★ ''சமரச முயற்சிகள் குறித்து ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒருமித்த நிலைப்பாட்டை கொண்டிருப்பது.

★ வடக்கு-கிழக்குப் பிரச்சினையை ஒரு பொதுவான தேசியப் பிரச்சினையாகக் கருதி, குறுகிய அரசியல் லாபங்களுக்கு இடந்தராது அதனைத் தீர்த்து வைக்க முன்வருவது.''

மேற்குறிப்பிட்டவையே டாக்டர் குமார் ரூபசிங்க குறிப்பிட்ட சில கருத்துக் கண்ணோட்டங்களாக இருந்தன.

### செச்சினிய பிரச்சினை

ரஷ்ய-செச்சினிய சர்ச்சையையும் அவர் உதாரணம் காட்டியிருந்தார். 1994 ஆம் ஆண்டு ரஷ்யா தனது பெரும் படைப்பலத்துடன் செச்சினியாவிற்குள் ஊடுருவி அதனைத் துவம்சம் செய்துதனது ஆளுமையை நிலைநாட்டமுற்பட்டது.

ஆனால் செச்சினியாவில் இருந்து பின்வாங்கிய கிளர்ச்சியாளர்கள் மீண்டும் தம்மைப் பலப்படுத்தி, ரஷ்யப்படைகளை பலமாக எதிர்த்து நின்றார்கள்.

இதன் காரணமாக கடந்த ஆண்டு நவம்பரில் ரஷ்யா தனது படையை முழு அளவில் செச்சினியாவிலிருந்து வாபஸ் பெற்று அரசியல் உடன்பாடொன்றுக்கு வந்திருந்தது என்று டாக்டர் ரூபசிங்க தெரிவித்திருந்தார்.

### ராணுவத்தீர்வு சாத்தியம் இல்லை

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவரீதியாகத் தீர்வொன்றைக் காண்பது இயலாத காரியம் என்பதையும் அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தார்.

எனவே வடக்கு - கிழக்கில் இராணுவ பலத்தை வைத்துக் கொண்டு அரசு கொண்டுவர உத்தேசிக்கும் அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய தீர்வுத்திட்டம் தகுந்த அரசியல் அணுகுமுறைகளின்றி வெற்றிபெறப் போவதில்லை என்பது திண்ணம்.

போர்நிறுத்தம் ஆயுதக் கையளிப்பு என்பன சாத்தியமாகாவிட்டால் இராணுவ நடவடிக்கையைத் தொடரவே இருதரப்பினரும் எண்ணுவர்.

ஆனால் ஒரு சமரச முயற்சிக்கு போர்நிறுத்தமோ அல்லது ஆயுதக்கையளிப்போ அவசியமில்லை. அவற்றின் மத்தியிலேயே சமரசத்தை எட்டுவதற்கான சூழலை ஏற்படுத்தலாம், என்று டாக்டர் குமார் ரூபசிங்க கூறியது இலங்கையின் இன்றைய அரசியலில் ஒரு புதிய கருத்துக்கண்ணோட்டமாகவே இருக்கின்றது.

போர்நிறுத்தம், மற்றும் ஆயுதக்கையளிப்பு என்பன சாத்தியப்படாத பட்சத்தில் மேற்குறிப்பிட்ட அணுகுமுறையைப் பரிசீலிக்கலாமென்றே எண்ணத் தோன்றுகின்றது.

★


கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
சட்ட விரோத கள் உற்பத்தி
விற்பனவுத் தடை

★ கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தொழில் பரப்புக்கு உட்பட்ட பகுதிகளில் சங்கத்தின் அனுமதி இன்றி கள் உற்பத்தியில் ஈடுபடுவதும்,

★ அனுமதிக்கப்பட்ட சங்கத்தின் தவறணைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கள் விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை மீறி சட்ட விரோதமான முறையில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது முகாமையாளர்,
கரவெட்டி ப. தெ. வ. அ. கூ. சங்கம்.
கரவெட்டி.
(44794)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி நாகேஸ்வரி இராமசேது
மலர்வு: 17—07—1932
உதிர்வு: 02—02—1996
திதித்திதியை:- 21-01-1997

ஆண்டொன்று தானிங்கு அருளாமல் ஓடியது
தாயான தண் நிழலைத் தானிழந்து
தவிக்கின்ற எம்மனதில் என்றும்
நீங்காது, நீங்காது அம்மா நின்அன்பு முகம்
உங்கள் ஆத்மா எம்பெருமான் இறைவனடியில் இணைந்திடப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தம்மளை,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
(44779)



கண்ணீர் அஞ்சலி
அந்தோனிப்பிள்ளை சிறிசெல்வன்
(தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ்ப்பாணம்)

எங்கள் எல்லோராலும் ''மாமா'' என அழைக்கப்பட்ட எங்கள் ஊழியன்
அமரர் அந்தோனிப்பிள்ளை சிறிசெல்வன்
அவர்களின் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
யாழ்ப்பாணம்.
(44795)



பாசையூர்
புனித அந்தோனியார் ஆலய
திருத்த வேலைகள்

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் முக்கிய திருத்த வேலைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.
உதவி செய்ய விரும்புவோர் எம்முடன்
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

அருட்திரு எரிக்றோசான்,
பாசையூர் பங்குத் தந்தை.
(44793)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்ததைச் செய்து முடிக்கும் நிலையில் விடுதலைப் புலிகள்

## ‘சண்டே ரைம்ஸ்’ விவரிப்பு

கொழும்பு, ஜன. 21

போர் நிலையில் தற்போது உள்ள சுதந்திரமாக நடமாடக் கூடிய தொங்கு நிலையைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தாங்கள் நினைத்ததைச் செய்து முடிக்கும் நிலையில் விளங்குகின்றார்கள் — என்று ‘சண்டே ரைம்ஸ்’ பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான அவரது கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

வன்னியில் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். ‘‘சூரியப் பிரகாசம்’’ இராணுவ நடவடிக்கையின் பின்னர் கடந்த 2 ஆண்டுகளில் பரந்த அளவில் யாலகாடு முதல் வன்னி வரை தாக்குதல்களை விரிவாக நடத்தியுள்ளார்கள்.

ஒன்று சேர்வது, பின்னர் கலைந்து செல்வது என்ற உத்தியை திறமையாகச் செய்து காட்டியுள்ளனர். இதற்கு உதாரணமாக முல்லைத்தீவு, பரந்தன் தாக்குதல்கள் அமைந்துள்ளன. கெரில்லாப் பாணி உத்தியில் இது முக்கியமானதாகும்.

இந்த உத்தி மூலம் படையினரைப் பரந்த அளவில் நிலை கொள்ள நிர்ப்பந்திப்பது, கெரில்லாவுக்கு எதிரான தாக்குதல் திறனை அழித்து விடுவது. இது தான் புலிகளின் உத்தியாகும் — என்று உள்ளது.

(அ-150-3)

## மீன்பிடிக்க ‘பாஸ்’ பெற கோரிக்கை

அராலி, ஜன. 21

அராலி, பொன்னாலை கடற் பகுதியில் பகல்வேளைகளில் மீன்பிடிக்க செல்வதற்கு இராணுவத்தினரிடம் ‘பாஸ்’ பெறுமாறு கோரப்பட்டுள்ளது.

கொத்ததுறை பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவத்திடம் ‘பாஸ்’ பெறுமாறும்—

‘‘பாஸ்’’ பெறாதுதொழில் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

## அம்புலன்ஸ் இல்லாததால் நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், ஜன 21

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வாகனம் இல்லாத காரணத்தால், அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஓராண்டுக்கு மேலாக இங்கு அம்புலன்ஸ் இல்லை எனவும் —

இதனால் நோயாளர்கள் தனியார் வாகனங்களையே நாடவேண்டியுள்ளதாகவும்—

இரவில் ஊரடங்கு அமுலில் இருக்கும் வேளையில் நோயாளர்களை தனியார் வாகனங்களில் அழைத்துச் செல்வதில் பல தடங்கல்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## சத்திர சிகிச்சை உபகரணங்கள்

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு சிறிய ரக சத்திர சிகிச்சை உபகரணங்கள் கொழும்பிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தச் சிறிய ரக சத்திர சிகிச்சை உபகரணங்கள் வலிகாமம் பிரதேசத்திலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (135)

## ஊசி மருந்து இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 21

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பிறந்தவுடன் குழந்தைகளுக்கு போட வேண்டிய பி. சி. ஜி தடுப்பூசி மருந்து முடிவடைந்துள்ளது.

இதனால் இங்கு பிறக்கும் குழந்தைகள் இந்த ஊசி மருந்து போடாமலேயே அனுப்பி வைக்கப்படுகின்றனர். [இ-15]

## விவசாயபீட மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன 21

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட அனைத்து கல்வியாண்டு மாணவர்களையும் நாளை காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள முக்கிய கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு விவசாயபீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. [இ-5]


# 90ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் கே. வீ. சரவணபவானந்தம்**

(கொழும்பு மாநகர முதல்வரின் பிரத்தியேகச் செயலாளர், சமாதான நீதிவான்)

எங்கள் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் எழுதுவினைஞராகப் பணி செய்துவரும்

**செல்வி மாலினி சரவணபவானந்தம்**

அவர்களின் தந்தையார் கே. வீ. சரவணபவானந்தம் கொழும்பில் இறைபதம் அடைந்த 90 ஆம் நாள் நினைவஞ்சலியில் அன்னாரின் குடும்பத்துடன் இணைந்து நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.**

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி, 21-01-97. (44785)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 23 — 05 — 1916

உதிர்வு: 22 — 12 — 1996

**அமரர்**
**கார்த்திகேசு சபாபதிப்பிள்ளை**

மானிலம் வாழ்வதற்கு விவசாயம் செய்து
மக்களையும் மாண்புடனே போற்றிக் காத்து
நல்லவனாய் வல்லவனாய் நாடுபோற்ற நடந்தீரே!
நல்லவர்கள் பக்கம் சார்ந்து
வாழ்ந்ததுதான் போதுமென்றா எம்மை விட்டுச் சென்றீர்?
வாடுகின்றோம். தேடுகின்றோம்; தந்தையே உம்மை.
இயற்கை இது மாறாது என்று நாம் தேறி
இறையடியில் சேர்வதற்கு இறைஞ்சுகின்றோம் நாளும்.

22-12-96 அன்று நடைபெற்ற எமது அருமைத் தந்தையாரின் மரணச்சடங்கில் பங்கு கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமக்கு ஆறுதல் அளித்த உறவினர், நண்பர்களுக்கும், பிந்திய நாள்களில் வீட்டுக்கு வந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

86/ 2 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (44786)

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள உத்தியோகஸ்தர்

அமரர்

**இராசலிங்கம் கிருஸ்ணலிங்கம்**

அவர்களது அகால மரணத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். விலை மதிப்பீட்டு திணைக்கள ஊழியர்கள்.**

148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (44797)

# WANTED ENGLISH TEACHER

**ST. PATRICK'S COLLEGE, JAFFNA.**

A Full - time teacher for English

**Years 6 to 11**

Applications should reach the Office before 28 th January 1997.

Please quote Ref. No: 21197

Applications after **28** January **1997** will not be entertained.

**- RECTOR**

(C/3962)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து **1997 - 02 - 28** ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. சிரேஷ்ட உதவி-நூலகர்
2. உதவிநூலகர் தரம் I
3. உதவிநூலகர் தரம் II
4. சித்த மருத்துவத்தில்-தற்காலிக விரிவுரையாளர்/ தற்காலிக செயன்முறை காட்டுநர்.

**சம்பள அளவுத்திட்டம்**

சிரேஷ்ட உதவி நூலகர் - ரூபா 12, 725-8 x325 - 15, 325/- (மாதமொன்றுக்கு)

உதவிநூலகர் தரம் I ரூபா 10, 650 – 5 x 325 – 12, 275/– (மாதமொன்றுக்கு)

உதவி நூலகர் தரம் II – ரூபா 6, 050-10 x 250– 8, 550/- (மாதமொன்றுக்கு)

தற்காலிக விரிவுரையாளர் - ரூபா 6, 050/- (நிலையானது) (மாதமொன்றுக்கு)

தற்காலிக செயன்முறை காட்டுநர் – ரூபா 4, 420/- (நிலையானது) (மாதமொன்றுக்கு)

**குறிப்பு:**

அ. 1993 மே 12 ஆம் திகதி 9/ 93 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/– செலுத்தப்படும்.

ஆ. ஆண்டுக்கு ரூபா 10, 000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தின் 10% மும் ‘‘புத்தகப்படியாக’’ ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் தவணைப்பணமாகச் செலுத்தப்படும்.

விண்ணப்பப்படிவங்களையும் மற்றும் இதர விவரங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் பெயரில் பெறப்பட்ட 2/50 ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

சிரேஷ்ட உதவி நூலகர்/ உதவி நூலகர் பதவிகளுக்கு நூலகவியலில் கணனியைப் பிரயோகித்தல் பற்றிய செயன்முறை சார்ந்த அறிவு/ கணனி விஞ்ஞான அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997 - 01 - 16

(சி-3961)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்க் குண்டு வெடிப்பில் அல்ஜீரியாவில் 20 பேர் பலி!

## கிராமம் மூன்றிலும் 36 பேர் படுகொலை

அல்ஜியேர்ஸ், ஜன. 21 அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியேர்ஸில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 20 பேர் கொல்லப்பட்டனர். 60 பேர் வரை காயம் அடைந்தனர்.

இஸ்லாமிய தீவிர வாதிகளே இந்தகுண்டு வெடிப்பை நடத்தி இருக்கலாம் என்று அரசு தரப்பு தெரிவிக்கிறது.

இராணுவத்தின் பக்க பலத்துடன் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துக்கு எதிராக கடந்த ஐந்து ஆண்டுகளாக இஸ்லாமிய தீவிரவாதிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த கார்க்குண்டு வெடிப்பு இடம் பெறுவதற்கு முதல் நாளான சனிக் கிழமை அல்ஜியேர்ஸில் இருந்து தெற்கே சுமார் நூறு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பெனிசிலிமென் என்ற கிராமத்தில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்டவர்கள் அரசு ஆதரவாளர்கள் என்றும் நம்பப்படுகிறது.

## எம். ஜீ. ஆரின் சிலை

புதுடில்லி, ஜன. 21 தமிழக முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் முழுவுருவ 9 அடி உயரமான வெங்கலச்சிலை ஒன்று புதுச்சேரியில் ராஜிவ் காந்தி போக்குவரத்து வளாகத்துக்கு முன் நிறுவப்பட்டுள்ளது. (இ-5)

## இரத்த அழுத்தம் ஏற்படக் காரணம்

மனப்பதற்றம், மனச்சோர்வு ஆகிய இரண்டும் உயர் இரத்த அழுத்த நோய்க்கு காரணமாகலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

கெட்டபழக்கம் என்னும் வகையில் புகைபிடித்தலும், மது அருந்துதலும் இரத்த அழுத்தநோயை அதிகரிக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சூடானில் 150 படையினர் பலி

சூடானில் அரசுப் படைகள் மீது போராளிக் குழுக்கள் நடத்திய தாக்குதலில் 150 படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சூடானில் அரசுப் படைகளுக்கும் போராளிக் குழுக்களுக்கும் இடையேயான சமீபகாலமாக மோதல்கள் தீவிரமடைந்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

கடந்த இருவாரங்களில் மட்டும் 300க்கும் மேற்பட்ட படையினர் போராளிக் குழுக்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

## கிளின்ரன் நேற்று பதவி ஏற்பு

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் இரண்டாவது பதவிக்கால பதவி ஏற்புவிழா நேற்று வாஷிங்டனில் நடைபெற்றது.

அமெரிக்க வரலாற்றில் இது 53 ஆவது பதவியேற்பு விழா ஆகும்.

''கப்பிற்றல் ஹில்'' மாளிகையில் இப்பாரம்பரிய வைபவம் நடைபெற்றது.

இதனை யொட்டி கடந்த சனிக்கிழமையே பெருவிருந்துகளும் நடனங்களும் கப்பிற்றல் ஹில்லில் இடம்பெறத் தொடங்கி இருந்தன.

பதவி ஏற்பு விழா நடைபெறுவதற்கு முதல் நாள் கப்பிற்றல் ஹில் மாளிகையில் ஆட்டமும் பாட்டமும் நடைபெற்றுக்கொண்டிருக்க, பில் கிளின்ரன் தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார் எனதெரிவிக்கப்படுகிறது.

இப்பதவியேற்பு விழாவுக்கு சுமார் 300 லட்சம் டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

# ஒருவன் தலைவனாகுவதற்கு தகுதி தொண்டனாக மாறும் கீழ்ப்படிவே!

இந்து சமயத்தினரின் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் இலங்கை மண்ணில் தனது புனித பாதங்களைப் பதித்த நூற்றாண்டு நினைவு இம்மாதம் பதினைந்தாம் திகதி தொடக்கம் இருபத்தைந்தாம் திகதி வரை இலங்கை வாழ் இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

சிக்காகோ சர்வமத மகா சபையில் வெற்றிவாகை சூடி, மேற்கில் இந்துமதத்தின் சீரிய சிந்தனைகளை பரவ வைத்து தாய் நாடு திருப்பும் வழியில் முதன்முதலாக சுவாமி விவேகானந்தரை எமது மூதாதையினர் பக்தி உணர்வுடனும், கோலாகலமாகவும் வரவேற்கும் பாக்கியத்தை பெற்றதின் மூலம் இந்து சமய நவீன வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தையே படைத்துவிட்டார்கள் எனலாம்.

கொழும்பில், கண்டியில், அநுராதபுரத்தில், வவுனியாவில், யாழ்ப்பாணத்தில் அவருக்கு வரவேற்புரைகள் வாசித்தளிக்கப்பட்டன. கொழும்பில் வரவேற்புரைக்கு விவேகானந்தர் பதிலளிக்கும் பொழுது பிச்சைக்காரனான ஒரு துறவிக்கு இத்தகைய இராசோபசாரம் செய்வதில் இருந்து இந்துக்கள் ஆத்மீகத்திற்கு அளிக்கும் மதிப்புத் தெரிகின்றது என்றும் நமது சமுதாயம் உயிர்வாழ வேண்டுமானால் சமய உணர்வை தேசிய வாழ்வின் முதுகெலும்பாக ஆக்கவேண்டும் என்று கூறியிருந்தார்.

அநுராதபுரத்தில் ''வழிபாடு'' (Worship) என்ற பொருளில் அவர் உரையாற்றும் பொழுது அது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது. ஒரு சில பிக்குகள் உட்பட பௌத்த மதத்தை பின்பற்றும் ஒரு சாரார் இச்சொற்பொழிவை குழப்ப முயன்றார்கள் எனவும், இதனால் இந்து சமயத்தவர்களுக்கும், பௌத்த சமயத்தவர்களுக்கும் இடையே மோதல் உருவாகும் நிலை ஏற்பட்டதாகவும், சுவாமி விவேகானந்தர் அன்பு கருணையின் பேரால் அங்கு அமைதியை நிலைநாட்டி குழப்பியவர்களும் வெட்கமுறும் வண்ணம் பகவான் புத்தரையும், புத்தமத தர்மத்தைப் பற்றியும், பேசியதாக குறிப்பேடுகளில் இருந்து அறியமுடிகிறது.

### பௌத்தம் போதிக்கும் கருணை

விவேகானந்தர் பகவான் புத்தரை மகத்தான கர்மயோகியாகவும் உயர்ந்ததொரு நீதி மார்க்கத்தை உலகிற்கு போதித்த மகா புருஷராகவும் கருதியிருந்தார். பௌத்த சமயம் போதிக்கும் கருணை உணர்வை இந்துசயத்தில் ஊடுருவச் செய்து பரப்ப வேண்டும் என்றும் விரும்பி இருந்தார். சமூக நலிவுகளுக்கெல்லாம் காரணம் பௌத்த உணர்வைக் கைவிட்டமையே என்றும், சொல்லிலும், செயலிலும் புத்தரின் மகத்தான பண்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சுவாமியார் கூறினார்.

சிக்காகோ சர்வமத மகாசபையில் ''புத்தசமயம் இந்துசமயத்தின் நிறைவு'' என்னும் பொருளில் பேசும் பொழுது ''புத்தரைப்பற்றி நாங்கள் கொள்ளுகின்ற கருத்து எதுவெனில் அவருடைய போதனைகள் அவரின் சீடர்களாலே அறிந்து கொள்ளப்படவில்லை என்பதுவே ஆகும்'', என்று கூறியுள்ளார்.

### மதமாற்றத்துக்கு காரணம்

''நாம் முதலில் ஆதரிக்க வேண்டிய தெய்வங்கள் எமது தேசமக்களே. என்னுடைய தேசமக்களை உயர்த்துவதற்காக ஆயிரம் முறைவேண்டுமானாலும் நான் நரகத்திற்கு செல்லத் தயார்.'' என்று கூறியவர் விவேகானந்தர்.

''எவன் ஒருவன் ஏழைகளிலும், பலவீனமடைந்தவர்களிலும், நோய்வாய்ப்பட்டவர்களிலும் சிவனைக்காண்கின்றானோ அவன் தான் உண்மையில் சிவனை வழிபடுகின்றவன்'', என்றும், இந்துக்களில் பலர் மதம் மாறுகின்றார்கள் என்றால் அதற்கு பசிக்கொடுமை மட்டும் காரணம் அல்ல என்றும் இந்துக்களின் உள்ளத்தில் உள்ள இரக்கமின்மையாலும், அது ஏற்பட்டதென்றும் இடித்துக் கூறினார்.

விவேகானந்தரின் இலங்கை வருகைக்கும், யாழ்ப்பாணவருகைக்கும் விழா எடுக்கும் இத்தருணத்தில் அவரின் சிந்தனைக்கு முக்கியமளித்து தொழிற்பட வேண்டியது அவசியமாகின்றது. மனித



குலத்தின் அவலங்களைப் போக்க சமயங்களும், சமயத்தலைவர்களும் முன்னின்று விவேகானந்தர் காட்டிய பாதையில் உழைக்க வேண்டும். சமயங்களுக்கிடையில் புரிந்துணர்வு இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

# மற்றவர்களுக்கு சேவைசெய்யுங்கள் அதிகாரம் செய்ய நினைக்காதீர்கள்!

### சமயங்கள் மத்தியில் புரிந்துணர்வு

சமயங்களுக்கிடையில் புரிந்துணர்வைக் கொண்டு வரும் முகமாக சிக்காகோவில் கூட்டப்பட்ட சர்வமத மகா சபைக்கு விவேகானந்தர் நன்றி கூறும் பொழுது—

''இத்தனை காலமாக இருந்துள்ள கஷ்டம் இது தான். நான் ஓர் இந்து; நான் என் சிறிய கிணற்றிற்குள் இருந்துகொண்டு உலகம் முழுவதும் என் சிறு கிணறு தான் என்று நினைக்கிறேன். கிறிஸ்வதன் தன் சமயமாகிய சிறுகிணற்றுள் இருந்து கொண்டு உலகம் முழுவதும் தன் கிணறு தான் என்று நினைக்கிறான். அவ்வாறே முகம்மதியனும் தன் சமயமாகிய சிறு கிணற்றில் உட்கார்ந்து கொண்டு அது தான் முழு உலகம் என்று நினைக்கிறான். நம்முடைய இச்சிறுவேலிகளைத் தகர்த்தெறிய அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பெரும் முயற்சிக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்'' என்று கூறினார்.

இயற்கையில் எந்த ஒரு பொருளும் ஒற்றுமையாக இருப்பதில்லை. குணத்தில், பண்பில், உருவத்தில் இவ்வாறாக அவை வேறுபடுகின்றன. வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் பண்பினைச் சமயங்கள் முன்னெடுக்க வேண்டும். அப்பொழுது தான் உண்மையான சமத்துவம் சமாதானம் ஏற்பட வழி பிறக்கும். சமய ஒற்றுமை என்பது ஒரு சமயத்தின் வெற்றியிலும் மற்றொரு சமயத்தின் அழிவிலும் தோன்றுவதன்று.

இது பற்றிக் கூறுகையில் ''தனது சமயம் மட்டும் தனித்துப் பிழைத்திருக்க பிற சமயங்கள் அழிந்துவிடுமென எவரேனும் பகற்கனவு காண்பாராயின் அவருக்கு எமது மனப்பூர்வமான இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதவி செய்; சண்டையிடாதே; ஒன்றுபடுத்து; அழித்துவிடாதே; சமரசமும் அமைதியும் வேண்டும். கருத்து வேறுபாடு வேண்டாம். என்பதை ஒவ்வொரு சமயமும் தனது கொடியில் விரைவில் எதிர்ப்புக்களுக்கிடையே எழுதும் என்பதை நான் அவருக்கு சுட்டிக் காட்டுவேன்'' என்றார் விவேகானந்தர்.

### யாழ்ப்பாணத்தில்

24-01-1897 இல் யாழ்ப்பாணத்தில் 15,00க்கும் மேற்பட்ட மக்கள் கூடி பக்திபூர்வமாக விவேகானந்தரை வரவேற்றார்கள். இத்துசமய உண்மைகளையும், வேதங்களின் உட்பொருளையும் விளக்கி மேலைத்தேச, கீழைத் தேசங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்திய விவேகானந்தரை நன்றிப் பெருக்குடன் எமது மூதாதையினர் நோக்கினார்கள். அவருக்கு வாசித்தளிக்கப்பட்ட வரவேற்புரையில் இந்நன்றியுணர்வைக் காட்டியுள்ளார்கள்.

25-01-1897 இல் யாழ் இந்துக் கல்லூரியில் வேதாந்தம் பற்றி உரையாற்றினார். வேதங்கள், அவற்றின் உட்பிரிவுகள், ஆத்மா, கடவுள் என்பவற்றுக்கெல்லாம் சைவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இப்பிரசங்கத்தில் விளக்கமளித்துள்ளார்.

''நேரமோ குறுகியது; விடயமோ பெரியது'' என்று தொடங்கும் இச் சொற்பொழிவு 1 மணி 40 நிமிடம் வரை நீடித்தது. 4,000 க்கும் மேற்பட்ட மக்கள் இப்பிரசங்கத்தை நேரடியாகக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

தானங்களில் எல்லாம் சிறந்தது ஆன்மீகத்தானம் தான் என்று அப்பேச்சில் எடுத்துச் சொன்னார்.

நெடுங்காலமாகவே நாம் பொறாமையில் மூழ்கிக் கிடக்கிறோம். இவருக்கு ஏன் அதிக மரியாதை கிடைக்கிறது? நான் ஏன் அதைப் பெறக் கூடாது? என்ற இவ்விதமான பொறாமை நம் மனத்தில் நிலைத்திருக்கின்றது.

''கடவுள் ஆராதனை நடக்கும் இடங்களில் கூட நாம் மற்றவர்களுக்கு முன் நிற்க விரும்புகின்றோம். இதைவிடக் கேவலமான அடிமையுணர்ச்சி வேறென்ன இருக்க முடியும்? இப்பொறாமையை அகற்ற வேண்டும். இந்த அடிமைத்தனம்தான் இந்தியாவின் பெரும் பாவம். எல்லோரும் அதிகாரம் செய்ய விரும்புகின்றார்கள். ஒருவரும் சேவை செய்ய விரும்புவதில்லை.

''பழங்காலத்து பிரமச்சரிய முறை போய்விட்டதனால் தான் இவ்விதம் நேர்ந்திருக்கின்றது. முதலில் கீழ்ப்படியத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு மேல் அதிகாரம் தானே வரும் முதலில் தொண்டர்களாயிருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதற்கு மேல் தலைவராகும் தகுதி பெறுவீர்கள். பொறாமையை மனத்தினின்று அகற்றினால் மகத்தான காரியங்களைச் செய்யக்கூடிய சக்தி உங்களுக்கு உண்டாகும்'' என்று சுவாமிவிவேகானந்தர் தமது யாழ்ப்பாணப் பேச்சில் இடித்துரைத்தார்.

★

— இரா. மகேந்திரசிங்கம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

ஐம்பது ரூபாவுக்கு விற்பனையாகும் ''அற்லஸ்'' மலிவு விலையில் இருபது ரூபா. தரமான சஞ்சிகைகள், பழைய நூல்கள் விற்பனைக்கு. ஜோஸ்யர் இரண்டாவது இதழ் வெளியாகியுள்ளது. ஜோஸ்யர், பழைய புத்தகக்கடை, 308, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9181)

அரைத்த NO 1 சந்தனம், சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட அர்ஷ்டபந்தன மருந்து என்பன விற்பனைக்கு உண்டு. தியாகநாதசர்மா, பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலடி நல்லூர். [44789]

**சோதிடம்**

குறிப்புகள் எழுத, குறிப்புப் பலன், திருமணப் பொருத்தங்கள் பார்க்க ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், கோயில் வீதி, முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம். (44776)

**மணமகள் தேவை**

மில் முகாமையாளர் 41 வயது உத்தரட்டாதி நட்சத்திரம் 46 கிரகபாவம் தீய பழக்கம் அற்ற இந்து மணமகனுக்கு நல்ல குணமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்புடன் கடித மூலமும் அல்லது நேரிலும் தொடர்பு கொள்ளலாம். ஸ்ரீ மாவை சோதிட நிலையம், கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (44777)

**நாடகம் எழுதுவது?**

மேடை, வானொலி, பாடசாலை, நாடகங்களை எப்படி எழுதுவது என்று விளக்கிக் கூறும் நூல். 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது. ரூபா 50. பூபாலசிங்கம் புத்தகசாலை. [44773]

## வலிகாமம் மேற்கு ஓய்வூதியம்

அராலி, ஜன. 21

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரிவில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் சங்கானை கிராமிய வங்கியில் பெறுபவர்களுக்கு வங்கிக்கு அனுப்பி வைக்கப்ட்டு இருப்பதாகவும்—

ஏனைய வங்கிகளில் பெறுபவர்கள் பிரதேச செயலகத்தில் வவுச்சர்களைப் பெற்று ஒய்வூதியத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும்—தெரிவிக்கப்பட்டுள்ளது. இ-12)

## விற்பனை நிலையம்

அராலி, ஜன. 21

அராலியில் நிலைகொண்டுள்ள படையினர் தங்களின் விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள சட்டடத்தில் இது இயங்கி வருகிறது. [இ-12]

## சிமெந்து கூட்டுத்தாபன ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஜன 21

காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்கள், கூட்டுத்தாபன அறிமுக அட்டை பெறுவதற்கான புகைப்படம் எதிர்வரும் 24 ஆம் திகதி எடுக்கப்படவுள்ளது

ஊழியர்களை அத்தினம் 55, கன்னாதிட்டியில் இயங்கும் கூட்டுத்தாபன பணிமனைக்கு சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (இ-5)

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் அதிபர்

**திரு. மு. திருநீலகண்டசிவம்**

B. A. Dip. in Edu.

(ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். பெற்றோர், பழையமாணவர்கள்.**

யா/ கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி., காரைநகர். (44788)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா சிவகுரு**

தோற்றம்: 12 - 02 - 1925 மறைவு: 24 - 01 - 1994

திதி: 21 - 01 - 97


மூன்று ஆண்டுகள் சென்ற போதிலும்
தோன்றும் உங்கள் சுந்தரத் தோற்றம்
நீண்ட நினைவை நிறுத்தி நிற்குது
பூண்ட உங்கள் பணிகள் யாவும்
வேண்டி நிற்குது உங்கள் ஆசியை
மீண்டும் வந்து கைகொடுத் துதவுக!

அன்புள்ள:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. (44742)

## 31ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணுக்கு 08 — 07 — 1932



விண்ணுக்கு 22 — 12 — 1996

**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**

(ராணி ஸ்ரோர்ஸ் - நாவலர்மடம்)

அறமென்ற நெறிநின்று பணிசெய்தவன்
இகவாழ்வு நிறைவாகி எமைவிட்டவன்
உறுசோகம் உறவோர்க்குத் தந்தோடினான்
உமைபங்கன் அடிகண்டு உயர்வெய்துக.

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மனைவி, மக்கள், சகோதரர்கள்.**

நாவலர் மடம், கரவெட்டி. (44784)

## SUBRA

பிரதான வீதி, சித்தன்கேணி.

**99 A/L கணித, விஞ்ஞான வகுப்புகள்**

| | |
|---|---|
| பௌதிகவியல் | — திரு. ஜெயம் |
| இரசாயனவியல் | — திரு. றமேஸ் |
| தூய/பிரயோக கணிதம் | — திரு. கருணா |
| தாவரவியல் | — பிரபல ஆசிரியர் |
| விலங்கியல் | — திரு. ராம் |

ஆரம்பமாகிவிட்டன.

★ **97 A/L PAPER CLASS** ஆரம்பமாகவுள்ளன.

அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். (44796)

தவத்திரு

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின்

## வருடாந்த குருபூஜை

சுவாமி செல்லம்மா அம்மையார் தலைமையில்

இடம் : ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி ஆச்சிரமம், கைதடி.

காலம் : **22 - 01 - 1997** புதன்கிழமை.

நேரம் : காலை **9.00 மணி**

★ பஜனை ★ அருட்சிந்தனை

★ அபிஷேக ஆராதனைகள்

தொடர்ந்து மகேஸ்வரபூஜை இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து திருவருள்பெற வேண்டுகிறோம்.

**- ஆச்சிரம அடியார்கள்.**

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி ஆச்சிரமம், கைதடி வடக்கு. (44762)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்: **10-11-1916**

விண்ணில்: **23-12-1996**

**அமரர் வேலுப்பிள்ளை நடராசா**

B A. (LOND.), DiP. - in - Ed. - (Cey.),

(இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர்)

தென்துன்னையம்பதியின் மாமனிதனாய்
பண்பின் இருப்பிடமாய் அன்பின் பிறப்
பிடமாய் நேர்மையின் சிகரமாய்
கடமையே கண்ணாய் குடும்பத்தின் ஒளியாய்
நானிலம் போற்ற வாழ்ந்த தலைவா!
இன்று எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
இறைவனடி சேர்ந்த விந்தையென்னவோ?

எங்கள் அன்புத் தெய்வத்தின், மறைவையொட்டி அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மலர் வளையங்கள், மாலைகள் முதலியன வைத்தவர்களுக்கும், பஜனை நிகழ்வில் பங்களித்தவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (22 - 01 - 1997) புதன்கிழமை காலை 8-30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்**

துன்னாலை தெற்கு, கரவெட்டி. (44783)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதிய சந்தேகம்!

வவுனியா அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் நிலைமோசமடைகின்றது. அவர்களின் நலன்கள் கவனிக்கப்படுவதில்லை. அதனை ஆட்சேபித்து ''புளொட்'' அமைப்பு உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தவிருப்பதாக அவ்வமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் இருந்து அகதிகளை வவுனியாவுக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது. குறிப்பாக வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருக்கும் அகதிகளை வவுனியா வருமாறு உத்தியோகபூர்வமாக ஒன்றுக்குப் பல தடவைகள் கேட்டது.

ஆனால் வவுனியா சென்ற அகதிகளில் பெரும்பாலானோர் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்ல முடியாதவாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் தமது பாதுகாப்புக் கருதியும், வாழ்க்கை மேம்பாடு கருதியும் யாழ்ப்பாணம் தவிர்ந்த வேறு இடங்களுக்குச் செல்ல விரும்புவதாக அறியப்படுகிறது.

அந்த வகையினரே பெரிய எண்ணிக்கையில் நீண்ட நாள்களாக — மாதக் கணக்காக — முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

இவர்களின் உணவு, வைத்திய, கல்வி நலன்கள் அரச தரப்பினரால் உரிய முறையில் கவனிக்கப்படுவதில்லை. வாழ்விட வசதிகளும் மிகமிக மோசம். அதனால் அகதி மக்கள் தொற்று நோய்களால் பீடிக்கப்படுகிறார்கள். மொத்தத்தில் அவர்களின் வாழ்க்கை, வழக்கில் தீர்க்கப்படாத சிறைக்கைதி வாழ்க்கையாகவே அமைந்திருக்கிறது.

அகதி மக்கள் திறந்த சிறைக் கைதி வாழ்க்கையை நடத்துவதாக கடந்த வருட இறுதியில் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்த எம். பிக்கள் குழு கண்டனம் தெரிவித்திருந்தது. எனினும் அந்த நிலை இன்னும் மாற்றப்படவில்லை. அகதிகள் மக்களாக அன்றி மாக்களாகக் கருதப்பட்டு, அடிமைகளாக நடத்தப்படுவதாகவே அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும், அது எப்படி எங்கு அமைக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் உரிமையும் ஒவ்வொரு பிரசைக்குமே உண்டு. வேறு எவருமோ அல்லது அரசோ தலையிட முடியாது! நிர்ப்பந்திக்க முடியாது.

ஆனால் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வேறு நாடு ஒன்றுக்கு சட்ட விரோதமாகச் செல்ல அனுமதி கேட்கவில்லை. இலங்கைப் பிரசைகள் என்ற வகையில் இந்த நாட்டுக்குள்ளே உள்ள பிற மாவட்டம் ஒன்றுக்கே செல்ல விரும்புகிறார்கள்;

ஆனால் அந்த உரிமை பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி நீண்ட காலமாக மறுக்கப்படுகிறது. தமிழர்கள் அரசினால் சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கப்படுவது வழக்கமாகிவிட்டது. அவர்கள் இந்நாட்டுப் பிரசைகள் அல்லர் என்றும் அரசு கருதுகிறதா என்ற கேள்வியை, சந்தேகத்தை வவுனியா அகதி முகாம் விவகாரம் புதிதாக எழுப்புகிறது.

# கிளாலி நீரேரி ஊடாக புலிகளுக்கு ஆயுதங்கள்

## அரச புலனாய்வுத் துறை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

''கடற்படையினரின் பாதுகாப்பையும் மீறி யாழ். கிளாலி நீரேரி ஊடாக விடுதலைப் புலிகள் யாழ். குடாநாட்டுக்குள் ஆயுதங்களைக் கொண்டு போகக் கூடிய நிலை உள்ளது''

இப்படி அரச புலனாய்வுத் துறையினர் தெரிவிப்பதாக 'த ஐலண்ட்' வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

''சூரியப்பிரகாசம்'' நடவடிக்கையின் பின்பு யாழ்ப்பாணத்தில் புதைத்து வைத்த ஆயுதங்கள் மூலம் அல்லது புதிதாகக் கொண்டு சென்ற ஆயுதங்களைக் கொண்டே ஆங்காங்கே புலிகள் தாக்தகுல் நடத்துவதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும் —

விடுதலைப் புலிகள் மீனவர் போல் திரிந்து இந்த ஆயுதங்களைக் குடாநாட்டுக்குள் கடத்துவதாகவும் — புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

கிளாலி நீரேரியில் விசேட பயிற்சிபெற்ற கடற்படைப் பிரிவு இரவு பகலாகக் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

குடாக்கடலில் கடற்புலிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து இலங்கை — இந்திய கடற்படைப் படகுகள் ரோந்தைத் தீவிரப்படுத்தியுள்ளன.

இப்படி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(இ-3-150)

### அனுருத்த தலைமையில் பிரசாரம்

கொழும்பு, ஜன. 21

தெற்கில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் அரச சார்பு பிரசாரத்துககு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவும், விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவும் தலைமை வகிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்தின் பிற்பகுதியில் நடக்கும் இந்தத் தேர்தலில் கூடிய இடங்களைப் பெற்று வெற்றி பெறும் வகையில் அரசு முழுமூச்சுடன் செயற்படும் என்றும் —

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியல் ஓரிரு தினங்களில் வெளியாகும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

### உள்ளூராட்சித் தேர்தலில்

## தினேஷ் தலைமையில் ம. ஐ. மு. போட்டியிடும்

கொழும்பு, ஜன. 21

தெற்கில் நடக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிடவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாசங்கத்தினரின் மறைமுக ஆதரவுடன் போட்டியிடும் இக்கட்சி, அரசின் அரசியல் பரவலாக்கல் யோசனைக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபடும் என்று கூறப்பட்டது.

இதேவேளை —

அரசின் அரசியல் பரவலாக்கல் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மகாசங்கத்தினர் கண்டியிலும், கொழும்பிலும் கூட்டங்களை நடத்த உள்ளனர்.

(இ-3-150)

### கப்பலில் 100 பெட்டி மலத்தியோன்

சண்டிலிப்பாய், ஜன. 21

யாழ். மலேரியா தடுப்பு இயக்கப் பிரிவுக்கு அண்மையில் கப்பல் மூலம் நூறு பெட்டி ''மலத்தியோன்'' கொண்டு வரப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் நோயால் ஆறு பேர் மரணமடைந்ததை அடுத்து கெருடாவில், உடுப்பிட்டி, தொண்டமனாறு ஆகிய பகுதிகளில் மலத்தியோன் தெளிக்கப்பட்டுள்ளதாகவும் —

மலேரியாக் காய்ச்சல் நோய் அதிகம் காணப்படும் செம்பியன் பற்று, கெற்பலி, பொலிகண்டி ஆகிய இடங்களில் தற்போது மலத்தியோன் தெளிக்கப்பட்டு வருவதாகவும் மலேரியா தடுப்பு இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-135)

### ஆதீனத்தில் ஏடு தொடக்கல்

கொழும்புத்துறை, ஜன. 21

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தைப்பூச தினமாகிய நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை சிறுவர்களுக்கு ஏடு தொடக்கல் (வித்தியாரம்பம்) நடைபெறும். (அ-30)

# காணாமற் போனவர்கள் குறித்து விசாரித்த குழு கொழும்பு திரும்பியது

### 57 பேர் சாட்சியமளித்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை கடந்த மூன்று தினங்களாக நடத்திய பாதுகாப்பு அமைச்சுக் குழு நேற்றுக் கொழும்பு திரும்பியது.

கடந்த சனிக்கிழமை முதல் நேற்று வரை இந்த விசாரணைகள் புன்னாலைக் கட்டுவனுக்கும் பலாலிக்குமிடையில் உள்ள ஓர் இடத்தில் நடைபெற்றன.

முதல் நாள் 15 பேரும், இரண்டாம் நாள் 25 பேரும், நேற்று 17 பேருமாக மொத்தம் 57 பேர் சாட்சியம் அளித்தனர்.

இவர்களினதும், இவர்களுக்கான சாட்சியங்களான 35 பேரினதும் எழுத்து மூல சாட்சியங்களை இக்குழு பதிவு செய்து கொண்டது.

பந்துல குலதுங்க தலைமையிலான இக்குழுவில் இரு சிவில் அதிகாரிகள், சிரேஷ்ட குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மற்றும் ஒரு மேஜர் ஜெனரல், ஒரு கடற்படை அதிகாரி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (இ-3-5)

## பயங்கரவாத தடைச் சட்டம் இப்போதைக்கு வாபஸ் இல்லை

### அமைச்சர் ரத்வத்த அறிவிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டம் இப்போதைக்கு வாபஸ் பெறப்படமாட்டாது. அது தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் — என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

''லங்காதீப'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

1979 ஆம் ஆண்டில் ஐ தே. க. அரசாங்கமே பயங்கரவாதச் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அது தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அந்தச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள் தொடரும். அந்தச் சட்டத்தின் தேவை அவசியமாகும் வரை அதனை வாபஸ் பெற முடியாது,

இன்றைய சூழ்நிலையில் மக்களைப் பாதுகாக்க அந்சட்டம் இன்றியமையாதது — என்றும் அமைச்சர் சொன்னார். (அ-3-150)

## இலங்கைக்குக் கடன் வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

### ஆணைக்குழுக் கூட்டத்தில் குஜ்ரால்

கொழும்பு, ஜன. 21

கடந்த ஆண்டு இந்தியா 3 கோடி அமெரிக்க டொலர் கடனை இலங்கைக்கு வழங்கியிருந்தது. முக்கியமாகப் போக்குவரத்துத் துறைக்கு இக்கடன் பயன்படுத்தப்பட்டது 2 ஆவது கடனுக்கான உடன்படிக்கை எனது இந்த விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட விருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் மேற்கண்டவாறு இலங்கை - இந்திய ஆணைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இரு தரப்புக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளன. இலங்கைக்கு ஏற்றுமதியாகும் 70 தொடக்கம் 80வரையிலான பொருள்கள் தொடர்பான அளவுக் கட்டுப்பாட்டை நீக்கவும் தீர்வைகளைக் குறைக்கவும் எமது அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

இங்கு நடந்த பேச்சுக்கள் தொடர்பாக மேலும் கருத்துக்களைப் பரிமாற இலங்கைத் தூதுக்குழு ஒன்று இந்தியா வரவேண்டும் என்று குஜ்ரால் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இக் கூட்டத்தில் பேசினார். (இ-3)

## சிங்களக் கிராமவாசிகள் இடம்பெயர்ந்தனர்

அநுராதபுரம் மாவட்டத்தில் கன்ககாவெவ பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலையடுத்து அங்கு வசித்த சிங்கள கிராம வாசிகள் அங்கிருந்து ஓடி கெப்பிற்றிக்கொலாவவில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

கன்ககாவெவ கிராமத்துக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட இந்த பொலீஸ் நிலையம் பிரதான வீதியில் இருந்து காட்டுக்குள் இரண்டரை கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது.

தாக்குதல் நடந்த சமயம் 120 பொலீஸார் அங்கு இருந்தனர். தாக்குதல் ஆரம்பித்ததும் சப். இன்ஸ் பெக்டர் வின்னி விக்கிரமசிங்க உட்பட 23 பொலீஸார் உயிரிழந்தனர். ஏனைய பொலீஸார் காடுகளுக்குள் தப்பி ஓடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரத்தில் இருந்து வெலிஓயாவுக்கு செல்லும் வாகனங்களுக்கு பாதையில் இந்த பொலீஸ் நிலைய பொலீஸார் பாதுகாப்பு வழங்கிவந்தனர். (உ-3-150)

### நாளை

தை 9

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி முன்இரவு 7. 33 வரை.

நட்சத்திரம்: புனர்பூசம் முழுவதும்

ராகுகாலம்: 12.35-2.05

சுபநேரம்: 5.05 - 6.35

[illegible]

## நிறுத்தாது சென்ற வான் மீது படையினர் துப்பாக்கிச் சூடு!

### ஹபரண பகுதியில் ஒருவர் பலி

கொழும்பு — கண்டி வீதியில், ஹபரண சோதனை நிலையத்தில் நிறுத்தாது வேகமாகச் சென்ற வான் ஒன்றின் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடந்த இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வான் சாரதியும், அதில் இருந்தவர்களும் இறந்தவரின் சடலத்தையும், காயமடைந்தவரையும் ஹிங்கிராங் கொட வைத்திய சாலையில் சேர்த்து விட்டு தப்பி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வானையும், அதில் இருந்தவர்களையும் பொலீஸார் தேடி வருகின்றனர்.

(இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வஜன வாக்கெடுப்பு - தேர்தல் ஒன்றாக நடத்த அரசு முடிவு

கொழும்பு, ஜன. 21

தென்பகுதி உள்ளூராட்சித் தேர்தலையும், அரசியல் பரவலாக்கல் யோசனைக்கான மக்கள் கருத்துக் கணிப்பையும் ஒன்றாக நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பீரிஸுக்கு பணிப்புவிடுத்துள்ளார் என்று கொழும்புச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்தத் தேர்தல்களுக்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அவரிடம் கேட்டுள்ளார்.

மார்ச் மாதம் இறுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் இத்தேர்தல் 12 மாநகர சபைகள், 31 நகர சபைகள், 198 பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு 3,567 பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய நடத்தப்படுகிறது.

ஒரு கோடி மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(இ-3-150)

# மாகாணப் பணிப்பாளராக கல்வி வலயம் - 1 இன் பணிப்பாளர்

## நேற்று முதல் புதிய நியமனம்

திருகோணமலை, ஜன. 21

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளராகப் பணியாற்றிய இ. சிவானந்தன் வடக்கு — கிழக்கு மாகாண கல்வியமைச்சில் மேலதிக மாகாண பணிப்பாளராக (திட்டமிடல்) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுத் திருகோணமலைக்குச் சென்ற இவருடன் மாகாணக் கல்வியமைச்சு அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டதாக மாகாண கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். வலயம் ஒன்றின் புதிய பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை யாழ். வலயம் ஒன்றின் அலுவலகத்தில் பணியாற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரலிங்கத்தை பணிப்பாளரின் பணிகளைக் கவனிக்குமாறு மாகாண கல்வியமைச்சு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-3-150)

# கடற்படை பலவீனமான நிலையில் உள்ளது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 21

''விமானப்படை நவீனமயப்படுத்தப்பட்டு விட்டது. ஆனால் கடற்படைதான் பலவீனமான நிலையில் உள்ளது. பல கப்பல்களை இன்னும் வாங்க வேண்டியுள்ளது.''

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்பு சாதனங்களை விஞ்சக் கூடிய அளவு நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

நவீன விமானங்கள் எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள், கிபிர் விமானங்கள் ஆகியன விமானப் படைக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆயுதக் கையளிப்பு விடுதலைப் புலிகளுக்கு கஷ்டமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த அரசு அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கியது. ஆனால் இப்போதைய ஆட்சி அப்படிப்பட்டதல்ல —

இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். (இ-3-150)

# தற்கொலைக்குத் தூண்டும் ஐரோப்பிய காலநிலை!

மணிலா, ஜன. 21

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் தற்போது சந்திக்கின்ற கடும்குளிர்காலம் ''தற்கொலைக்காலம்'' என்று பொதுவாக அழைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்காலம் மரங்களில் இலைகள் உதிர்ந்து, சுற்றிலும் பனிபெய்து, செடி கொடிகளெல்லாம் பனியால் மூடப்பட்டு யாவுமே ஒரு சூனிய வெளிபோல இருக்கும் என்றும்—

இக்காலத்தில், எவரும் வீதிகளில் நடமாடமாட்டார்கள்; ஓசைகள், ஒலிகள் இருக்கா, இப்படியான கால நிலை மனிதர்களுக்கு தனிமையையும் மனவருத்தத்தையும் தருவதாக இருக்கும்; என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலை உணர்வுகளை மட்டுப்படுத்த மருத்துவ விஞ்ஞானிகள் 'செற்றாலின்' என்ற மாத்திரையை தற்போது அறிமுகம் செய்துள்ளனராம்.

(இ-5)

# பலூனில் உலகை வலம் வரும் முயற்சி மீண்டும் தோல்வி கண்டது

## எரிவாயு பற்றாக் குறைவு

சிங்கப்பூர், ஜன 21

பலூனில் உலகை வலம் வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கரான ஸீரீவ் வொஸெற் என்பவர் இந்தியாவோடு தனது பயணத்தை முடித்துக் கொள்ள இருக்கிறார்.

ஹீலியம் வாயுவில் செயல்படும் அந்த பலூனுக்கு எரிபொருள போதாமையே அதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தியாவின் வரதனாசிக்கு உயரே பலூனில் சுற்றிக் கொண்டிருக்கும் வொஸெற் ஆக அதிகமான நேரத்துக்கு பலூனில் பறந்த சாதனையை ஏற்படுத்தியவுடன் அங்கு தரை இறங்குவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உலகை பலூனில் வலம் வர கடந்த இரண்டு வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த மூன்றாவது முயற்சியும் தோலவியில முடிந்துள்ளது. (இ-5)

# கறுப்புக்கொடி காட்ட முயன்ற 70 பேர்கைது

சென்னை வந்திருந்த இந்தியப் பிரதமர் தேவகௌடாவுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்ட முயன்ற பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த 70 பேர் கைது செய்யப்பட்டனர்.

காவேரி நதி நீர் பிரச்சினையில் பிரதமர் நடு நிலையோடு செயற்படவில்லை என பெரியார் திராவிடர் கழகம் குற்றஞ்சாட்டி உள்ளது.

பிரதமர் வருவதற்கு முன்னரே இவர்கள் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்கள். அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# ஹெப்ரோனுக்கு அரபாத் விஜயம்

டெல்அவிவ், ஜன. 21

பலஸ்தீன தலைவர் யாஸீர் அரபாத் ஹெப்ரோன் நகருக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

அங்கு அரபாத்துக்கு பலஸ்தீன மக்கள் அமோக வரவேற்பு அளித்தனர்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு இணங்க ஹெப்ரோன் நகரில் 80 சதவீதமான பகுதி பலஸ்தீனத்தின் ஆட்சியின் கீழ் வந்துள்ளது. (இ-5)

# பாசையூர் பகுதி விசேட அ. அட்டை

கொழும்புத்துறை, ஜன. 21

'' ஜே/64 - பாசையூர் கிழக்கு, ஜே/65 - பாசையூர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய விசேட அடையாள அட்டைகள் நாளை புதன்கிழமை, காலை 9.00 மணி தொடக்கம் பாசையூர் புனித அந்தோனியார் வாசிகசாலையில் வைத்து விநியோகிக்கப்படும்.

உரியவர்கள் குடும்பவிவர நிரல் அல்லது உணவுப்பங்கீட்டு அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வந்து இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-30)

## மேயர். .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாநகர சபை ஆட்சியைக் கைப்பற்றுவதில் இரு தரப்பினரும் கூடிய அக்கறை காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

## 2 சடலங்கள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுவதற்காக பிரேத அறையில் வைக்கப்பட்டன.

அதேசமயம் மட்டுவில் வடக்கில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது இரு விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும்—

அவர்களின் சடலங்களும் ரி-56 கர துப்பாக்கி, 3 கைக் குண்டுகள், 57 துப்பாக்கி ரவைகள் உட்பட பலதரப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (இ-4-15)

# மதுரை மாநாட்டில் வாசுதேவவும் கலந்து கொள்ளவிருந்தார்!

கொழும்பு, ஜன. 21

கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுரையில் நடைபெற இருந்த ஈழத் தமிழருக்கு ஆதரவான தமிழர் எச்சரிக்கை மாநாட்டில் லங்காசம சமாஜக்கட்சி உறுப்பினரும் நாடாளுமன்ற எம்பியுமான வாசுதேவ நாணயக்காராவும் கலந்து கொள்ள இருந்தார் என்று லங்கா தீப சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு காவல் துறையினர் இந்த மாநாட்டுக்குத் தடை விதித்தது தெரிந்ததே.

# அரசியல் தீர்வு யோசனையை அமுல்செய்வதில் இந்தியா அக்கறை

கொழும்பு, ஜன. 21

''இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகள் எப்படியாவது அமுல் செய்யப்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.''

மேற்கண்டவாறு ''சண்டே லீடர்'' பத்திரிகையின் அரசியல் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்வு யோசனையை ஏற்குமாறு இந்தியாவின் ராஜதந்திரிகள் சிலர் ஐ. தே. க. எம். பிக்களைவலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் நாளை ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நடத்தும் பேச்சு முக்கியத்துவம் பெறுகிறது. இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

இதற்கிடையில் இந்திரக்குமார் குஜ்ரால் நேற்று மாலை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவை அவரது றொஸ்மிட் பிளேஸ் இல்லத்தில் சந்தித்தார்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் நரேஸ்வர் தயாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஏ. எம். ராம், பிரதமரின் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோரும் இந்தச் சந்திப்பின் போதுசமுகமளித்திருந்தனர்.

இந்திரகுமார் குஜ்ரால் நேற்று பிற்பகல் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் அமைச்சு அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

(இ-3-4-150)

# சிற்ப கண்காட்சி

குருநகர், ஜன. 21

யாழ்.திருமறைக் கலா மன்றம் இம்மாதம் 25 ஆம், 26 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் சிற்பக் கண்காட்சியை யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடத்த உள்ளது.

(இ-51)

## சந்தேகத்துக்குரிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களச் சேவைக்கு 'சண்டே ரைம்ஸ்' வார இதழின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பின்வருமாறு தெரிவித்தார்:-

காணாமற் போன விமானத்தைத்தேடி விமானங்கள் பலாலி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டன. அதே போலக் கடற்படைப் படகுகளும் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இருப்பினும் நேற்று மாலை வரை பயன் எதுவும் கிடைக்கவில்லை. இன்றும் தேடும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று விமானப் படையினர் தெரிவிக்கின்றனர்.

விமானம் எவ்வாறு காணாமற்போனது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்த விமானம் ஏவுகணைத் தாக்குதலால் வீழ்த்தப்பட்டதா என்பது பற்றி தற்போது சரிபாகக் கூற முடியாமல் உள்ளது.

இனந்தெரியாத கப்பல் ஒன்றின் நடமாட்டம் பற்றிய தகவல் கிடைத்தது —

அதைக் கண்டறிய இந்த விமானம் சென்றது — ஆகியவை சந்தேகத்துக்குக் காரணமாகும்.

இவ்வாறு இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

(இ-3-4-5-10)

## தன்னியக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக அரசு கூறியதையடுத்து கடற்படையினர் பூநகரிக் கடற்பகுதியில் தேடுதல் மேற்கொண்டிருந்தனர்.

தற்போது அந்த தேடுதல் நடவடிக்கையைக் கைவிடப் போவதாக கடற்படையினர் கூறியுள்ளனர் என்று ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விமானம் காணாமற் போனது தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஒன்றை விமானப்படை மேற்கொண்டுள்ளது.

இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விமானம் காணாமற் போயிருக்கலாம் என்று முன்னாள் விமானப் படைத்தளபதி ஹரி குணதிலகா தெரிவித்தார்.

அதேசமயம் இந்த விமானம் வன்னிப் பிரதேசத்தில் வீழ்ந்து நொறுங்கியதாக விடுதலைப் புலிகள் லண்டனில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (இ-150)


# வெற்றிடம்

கொக்குவில் பகுதியில் விரைவில் திறக்கப்படவிருக்கும் 'உதயன்' கிளைப் பணிமனையில் நிர்வாகப் பொறுப்பில் பணியாற்றுவதற்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. செய்தி, விளம்பர விடயங்களைக் கையாள்வதிலும் விநியோக நடவடிக்கைகளைக் கண்காணிப்பதிலும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

தமது பிரதேசத்தில் தம்மைச் சிபாரிசு செய்யக் கூடிய இரண்டு பிரமுகர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு 25-01-1997 இற்கு முன்னர் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர் (ஆளணி, நிர்வாகம்)
'உதயன்'
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்கது பணிமனையில் 21-01-1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org